# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2014 ஜுலை திங்கள் 30–ம் நாள் (30.07.2014) புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**23.06.2014–ம் தேதிய சாதாரணக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்கள்.**

**பொருள் எண். 15**

கல்லுக்கூட்டம் பேரூராட்சிக்குட்பட்ட லெட்சுமிபுரம் வில்லேஜ் பகுதியில் நகர புல எண்.757/2 -ல் 3.200 சென்ட் வழிப்பாதை இடத்தினை திருமதி. ஆமீனா, த/பெ.அசன்கான், கதவு எண்.10.H/10, புன்னைநகர், நாகர்கோவில் அவர்கள் நகராட்சிக்கு பாதையை நன்கொடை பத்திரம் எண்.608/2014–ன்படி நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்துள்ளனர். மேற்படி இடத்தினை நகராட்சிக்கு சொந்தமாக ஏற்றுக்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,.

**அ.குறிப்பு** : நன்கொடை பத்திரம் பெற்ற இடத்தினை ஏற்றுக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.tpi-998/14)

**தீர்மானம் எண்.928 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 23–வது வார்டு சாஸ்தன்கரை பகுதியில் நகர புல எண்.P2-1/12, P2-1/17, P2-3/15, P2-3/14, P2-3/16, P2-3/17, P2-3/16, P2-1/13-ல் 5.935 சென்ட் வழிப்பாதை இடத்தினை திரு.ஆறுமுகக்கண் நாடார் அவர்கள் மகன் (1) திரு.எ.அன்பையன், சாஸ்தாங்கரை, (2) திரு.ஆறுமுகக்கண் நாடார் அவர்கள் மகன் திரு.செல்லத்துரை, சாஸ்தன்கரை, (3) திரு.பொன்னம்பலம் நாடார் அவர்கள் மகன் திரு.பி.ராஜமணி, நாராயணநகர், கதவு எண். 2/340–ல் (4) திரு.றசல் அவர்களின் மகன் திரு.ரெகு, களிமார் மற்றும் (5) திரு.ராஜ ரெத்தினம் அவர்களின் மகன் திரு.ராபின் குமார் ஆகியோர் சேர்ந்து பாதையை நன்கொடை பத்திரம் எண்.115/2014–ல் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்துள்ளார். மேற்படி இடத்தினை நகராட்சிக்கு சொந்தமாக ஏற்றுக்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,.

**அ.குறிப்பு** : நன்கொடை பத்திரம் பெற்ற இடத்தினை ஏற்றுக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.tpi-425/2014)

**தீர்மானம் எண்.929 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 1–வது வார்டு சாஸ்தன்கரை பகுதியில் நகர புல எண். A1-32/8, A1-32/9A/1A-ல் 4.450 சென்ட் வழிப்பாதை இடத்தினை திருமதி. சுகிதா, கதவு எண்.4/4சி. பூலவிளை என்பவர் நகராட்சிக்கு பாதையை தானபத்திரம், பத்திரம் எண்.555/2013–ல் ஒப்படைப்பு செய்துள்ளார். மேற்படி இடத்தினை நகராட்சிக்கு சொந்தமாக ஏற்றுக்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,.

**அ.குறிப்பு** : தானப் பத்திரம் பெற்ற இடத்தினை ஏற்றுக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.tpi-1191/14)

**தீர்மானம் எண்.930 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 2–வது வார்டு கொம்பன்விளாகம் பகுதியில் நகர புல எண்.B1-27/9-ல் 3.750 செண்ட் வழிப்பாதை இடத்தினை திருமதி. சுகிதா, கதவு எண்.4–4/சி3. பூலவிளை மற்றும் திருமதி.சி.ராஜம், கதவு எண். 8–92/B, பண்டாரவிளை, மண்டைக்காடு என்பவர்கள் சேர்ந்து நகராட்சிக்கு பாதையை நன்கொடை பத்திரம் எண்.2038/2012–ல் ஒப்படைப்பு செய்துள்ளனர். மேற்படி இடத்தினை நகராட்சிக்கு சொந்தமாக ஏற்றுக்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,.

**அ.குறிப்பு** : நன்கொடை பத்திரம் பெற்ற இடத்தினை ஏற்றுக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.tpi-1192/14)

**தீர்மானம் எண்.931 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 1**

குளச்சல் நகராட்சியின் **2013–14** ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.சி1/1921/2004)

**தீர்மானம் எண்.932 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலைய கடை எண்.10, 23, 32, 36, 39, 17,18, கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண். 4, 29, 30 மற்றும் கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண். 31, 33 முதல் 37 மற்றும் 60 முதல் 64, 22, 32 மற்றும் டீ கடை ஆகிய கடைகளுக்கும் 30.06.2014–வுடன் மூன்றாண்டு உரிமம் முடிவடைந்துள்ளதால் 01.07.2014 முதல் 01.07.2017 முடிய, மேலும் மூன்றாண்டுகளுக்கு கடை வாடகை உரிமம் நீட்டிப்பு செய்தும், வாடகை தொகையில் 15% உயர்வு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வரிவிதிப்பு எண். | உரிமைதாரர் பெயர் | தற்போதைய வாடகைத் தொகை ரூ. | 15% உயர்வு செய்த தொகை ரூ. | உயர்வு செய்யப்பட்ட பின்னர் வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| **காமராஜர் பேருந்து நிலைய கடைகள்** | | | | | |
| 1 | 2005010 | திரு. ரவீந்திரன் | 1065 | 160 | 1225 |
| 2 | 2005023 | திரு. டீகால் | 685 | 103 | 788 |
| 3 | 2005036 | வெள்ளைரோஜா சுய உதவிக்குழு | 443 | 66 | 509 |
| 4 | 2009001 | C.S.ராஜ் | 632 | 95 | 727 |
| 5 | 2013001 | திரு.சி.ஐயப்பன் | 2000 | 300 | 2300 |
| **கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடைகள்** | | | | | |
| 6 | 2009004 | திரு.முகம்மதுஅப்துல்நாசர் | 1748 | 262 | 2010 |
| 7 | 2013002 | எல்.ஐ.சி. மினி அலுவலகம் | 1000 | 150 | 1150 |
| 8 | 2013003 | எல்.ஐ.சி.சர்வீஸ் சென்டர் | 1000 | 150 | 1150 |
| 9 | 2011002 | ஸ்டார் கெல்த் இன்சூரன்ஸ் | 1025 | 154 | 1179 |
| **கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடைகள்** | | | | | |
| 10 | 2009006 | பி.எஸ்.என்.எல்.அலுவலகம் | 6463 | 969 | 7432 |
| 11 | 2011001 | திரு.தாஹீர் உசைன் | 1525 | 229 | 1754 |
| 12 | 2007062 | திரு. ஐசக் | 1996 | 299 | 2295 |
| 13 | 2012006 | திரு.T.செல்வராஜ், டீ கடை | 7750 | 1163 | 8913 |

**அ.குறிப்பு:**மேற்படி வாடகைத்தரர்களின் வாடகை உரிமம் 30.06.2014–வுடன் முடிவடைந்துள்ளதால், மேலும் மூன்றாண்டு நீட்டிப்பு செய்தும், 15% வரியினை உயர்வு செய்யவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/2035/2011)

**தீர்மானம் எண்.933 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட சாஸ்தாங்கரை பகுதியில் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி செயல்பட்டு வருகிறது. மேற்படி விடுதிக்கு சொத்துவரி விலக்கு அளிக்குமாறு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் கேட்டுக் கொண்டுள்ளார். அதன்படி அரசாணை எண்.122(C)–ன்படி சொத்துவரி விலக்களிக்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பார்வையிட்டு சொத்து வரியிலிருந்து விலக்களிக்கலாம்.

(ந.க.எண். அ1/1605/2013)

**தீர்மானம் எண்.934 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு வரிவிலக்கு அளிக்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள் மற்றும் கணனி பிரிவிற்கு தேவையான பொருட்கள் வாங்க 2014–15–ம் ஆண்டிற்கு உத்தேச செலவுத் தொகை ரூ.5,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். எச்1/936/2010)

**தீர்மானம் எண்.935 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சி ஈப்பு TN.74.V.3530–ல் ஆயில் மற்றும் டீசல் பில்டர்கள் பழுதடைந்து விட்டதால், பணியின் அவசியம் கருதி மேற்படி பழுதுகளை சரி செய்த வகையில் செலவு செய்யப்பட்ட ரூ.630/–ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/5030/2010)

**தீர்மானம் எண்.936 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் TN.75.P.8424–ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்த வகையில் ரூ.679/– பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். எச்1/1407/2014)

**தீர்மானம் எண்.937 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினி வாகனம் TN.75.P.8399–ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்த வகையில் ரூ.849/– பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். எச்1/1407/2014)

**தீர்மானம் எண்.938 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினி வாகனம் TN.74.T.5508–ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்யவும், முழுசர்வீஸ் மற்றும் கிரீஸ் அடிக்கப்பட்ட வகையில் ரூ.1,250/– பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பழுது நீக்கம் செய்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். எச்1/2913/2009)

**தீர்மானம் எண்.939 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு தேவையான கிருமி நாசினிகள் இருப்பில் இல்லாததால் பைரித்ரம் மற்றும் அபேட் மருந்து வாங்க உத்தேச செலவுத் தொகை ரூ.1,80,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். எச்1/1243/2013)

**தீர்மானம் எண்.940 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையம் அருகில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் அம்மா உணவகம் கட்டும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி பத்திரிக்கைகளில் வெளியிட்ட வகையில் கீழ்க்காணும் விவரப்படி விளம்பர கட்டணம் செலுத்த கோரி சம்மந்தப்பட்ட பத்திரிக்கை அலுவலகங்களிலிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | தினமுரசு நாளிதழ்,<br>நாகர்கோவில். | ரூ. 4,500/– |
| 2. | தினத்தந்தி நாளிதழ்,<br>நாகர்கோவில். | ரூ. 2,352/– |

மேற்காணும் தொகையினை சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1202/2014)

**தீர்மானம் எண்.941 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சிக்கு சொந்தமான அனைத்து கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு நிறுவி, அதன் புகைப்படத்தை 30.06.2014–க்குள் வலைதளத்தில் பதிவு செய்ய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு நிறுவப்பட்டது போக எஞ்சிய கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு நிறுவுவதற்கு ரூ.1,20,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று 03.07.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.29% அதிகம். |
| 2. | திரு.C.தேவராஜ்<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.06% குறைவு. |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் அளித்துள்ள மதிப்பீட்டைவிட 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** :1) மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.1,20,000/–க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.இ1/1555/2014)

**தீர்மானம் எண்.942 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சி குடிநீர் வினியோக மண்டல II–க்கு உட்பட்ட பகுதிகளில் ரூ.3,50,000/– மதிப்பீட்டில் வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக இந்நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று 18.02.2014 மற்றும் 28.02.2014 ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை. அதன் பின்னர் 05.03.2014 முதல் 28.05.2014 வரை தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலில் இருந்த காரணத்தால் ஒப்பந்தப்புள்ளி கோரப்படவில்லை. தற்போது 03.07.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.07% குறைவு. |
| 2. | திரு.P.பாலகிருஷ்ணன் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.47% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் அளித்துள்ள மதிப்பீட்டைவிட 0.07% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** :1) மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.3,50,000/–க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.இ1/294–1/2014)

**தீர்மானம் எண்.943 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,00,000/– க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.902 நாள் 30.05.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 03.07.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவராஜ் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.20% குறைவு. |
| 2. | திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.32% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் மதிப்பீட்டைவிட 0.20% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசர அவசியம் கருதி

இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/796/2014)

**தீர்மானம் எண்.944 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு ஆர்.சி.கோவில் அருகில் சுனாமி நினைவு சின்னத்தை சுற்றி பேவர் பிளாக் அமைப்பதற்கும், கோவிலின் முன்புற சாலையில் டைல்ஸ் பதிப்பதற்கும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,00,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.899 நாள் 30.05.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 03.07.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.செல்லநாடார் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.05% குறைவு. |
| 2. | திரு.C.தேவராஜ் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.07% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரரின் மதிப்பீட்டைவிட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1200/2014)

**தீர்மானம் எண்.945 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு வார்டு எண்.12–ல் வடிகால் ஓடையின் அருகில் சுத்திகரிப்பு தொட்டி அமைத்து, கழிவுநீரை கடலில் சேர்ப்பதற்கும், வடிகால் ஓடையில் மூடு சிலாப் அமைப்பதற்கும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,50,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.898 நாள் 30.05.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 03.07.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.19% குறைவு. |
| 2. | திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.26% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரர் அளித்துள்ள மதிப்பீட்டைவிட 0.19% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1199/2014)

**தீர்மானம் எண்.946 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20–ல் இலப்பவிளையில் கதவு எண்.20–86 வீட்டின் முன்பு புதிதாக மின்கம்பம் அமைத்து புதிதாக தெருவிளக்கு அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1338/2014)

**தீர்மானம் எண்.947 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23–ல் கதவு எண்.29–23A எண் கொண்ட கட்டிடத்தின் குடிநீர் இணைப்பை மனுதாரர் திரு.H.ஹபீப்பு அப்துல் றசீது என்பவர் (04.07.2014 முதல்) தற்காலிகமாக துண்டிப்பு செய்ய கோரியுள்ளார். எனவே மனுதாரின் வேண்டுகோளை ஏற்று கதவு எண்.29–23A ல் உள்ள குடிநீர் இணைப்பு தற்காலிகமாக துண்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1619/2014)

**தீர்மானம் எண்.948 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

இந்நகராட்சிக்குட்பட்ட மெயின்ரோடு பகுதியில் கதவு எண்.27–43 எண் கொண்ட கட்டிடத்தின் குடிநீர் இணைப்பை துண்டிக்குமாறு மனுதாரர் திருமதி. மாரியம்மாள் என்பவர் கோரியுள்ளார். மேற்கண்ட கட்டிடத்தின் மீது நிலுவை எதுவும் இல்லை. எனவே மனுதாரரின் வேண்டுகோளை ஏற்று கதவு எண்.27–43 –ன் குடிநீர் இணைப்பை துண்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1492/2014)

**தீர்மானம் எண்.949 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19**

இந்நகராட்சிக்குட்பட்ட காந்தி ஜங்சன் பகுதியில் கதவு எண்.24–56 கட்டிடத்தின் குடிநீர் இணைப்பு 15.02.2012 அன்று குடிநீர் நிலுவை இருந்த காரணத்தால் துண்டிப்பு செய்யப்பட்டது. மேலும் மனுதாரர் திரு.ஜார்ஜ், கதவு எண்.24–56 கட்டிடத்தின் குடிநீர் இணைப்பு கட்டண நிலுவைத் தொகை முழுவதையும் செலுத்தியுள்ளார். எனவே துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்பை மீண்டும் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1492/2014

**தீர்மானம் எண்.950 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 20**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு பகுதியில் கதவு எண்.16–3 கட்டிடத்தின் குடிநீர் இணைப்பு 09.05.2014 அன்று தற்காலிகமாக துண்டிப்பு செய்யப்பட்டது. மேலும் மனுதாரர் திரு.எம்.பிரான்சிஸ் 09.07.2014–ல் மீண்டும் குடிநீர் இணைப்பு வழங்க கோரியுள்ளார். எனவே மனுதாரரின் வேண்டுகோளை ஏற்று கதவு எண்.16–3–ன் குடிநீர் இணைப்பை மீண்டும் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1660/2014)

**தீர்மானம் எண்.951 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 21**

இந்நகராட்சிக்குட்பட்ட பள்ளிவிளாகம் பகுதியில் திரு.முருகேசன் என்பவர் கதவு எண்.26–69–ன் குடிநீர் குழாய் இணைப்பை தற்காலிகமாக துண்டிக்க கோரியுள்ளார். மேற்கண்ட கதவு எண்ணின் மீது வரி நிலுவை எதுவும் இல்லை. எனவே மனுதாரரின் வேண்டுகோளை ஏற்று மேற்கண்ட வீட்டின் குடிநீர் குழாய் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/813/2014)

**தீர்மானம் எண்.952 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 22**

இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள சாலைகள், வடிகால் ஓடைகள், குடிநீர் வினியோக வால்வு பிட்டுகள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கு 2014–15–ம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.4,50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1826/2014)

**தீர்மானம் எண்.953 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 23**

இந்நகராட்சிக்குட்பட்ட நரிக்கல் பகுதியில் பாம்பூரி வாய்க்கால் கரை பக்கம் அமைந்துள்ள ஒற்றையடி பாலம் மிகவும் மோசமாக பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளதால், அதனை இடித்து மாற்றி விட்டு புதிய பாலம் கட்டும் பணியினை நகராட்சி மேற்கொள்வதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை என ரீத்தாபுரம் பேரூராட்சியின் 27.05.2014–ம் தேதிய சாதாரணக் கூட்டத்தில் தீர்மானம் (தீர்மானம் எண்.315 (63) நாள் 27.05.2014) நிறைவேற்றப்பட்டு தீர்மான நகல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி பழுதடைந்த பாலத்தை மாற்றி புதிய பாலம் கட்டும் பணியானது Kfw திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பொருள் தொடர்பாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1549/2014)

**தீர்மானம் எண்.954 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 24**

இந்நகராட்சிக்குட்பட்ட 20–வது வார்டு இக்பால் தெருவில் மொர்க்கண்டைல் வங்கி முதல் இலப்பவிளை வரையிலான பகுதியில் சாலை போக்குவரத்து மிக நெருக்கடியாக காணப்படுகிறது. மேற்படி சாலை மிகவும் குறுகலாக உள்ளதால், ஏற்கனவே அமைந்துள்ள வடிகால் ஓடையில் மேல் மூடி அமைத்து சாலையை விரிவுப்படுத்துவதற்கும், மேலும் இலப்பவிளை பள்ளி அருகில் அமைந்துள்ள தெருவில் குறுகலாக காணப்படும் வடிகால் ஓடை நிறைந்து கழிவுநீர் சாலையில் சென்று சாலை பழுதடைந்துள்ளதால் சுகாதாரக் கேடு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டும், குறுகலான வடிகால் ஓடையை விரிவுப்படுத்தி மேல் மூடி அமைக்கவும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,50,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1801/2014)

**தீர்மானம் எண்.955 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 25**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையத்தின் வடக்கு பக்கம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அருகில் பழைய நூலக கட்டிடம் மற்றும் தீயணைப்பு ஊர்தி நிறுத்துமிடம் ஆகியவை அமைந்துள்ள இடத்தில் அம்மா உணவக கட்டிடம் கட்டப்பட உள்ளதால், மேற்படி தீயணைப்பு ஊர்தி நிறுத்துவதற்கு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் கிழக்கு பக்கம் உள்ள காலியிடத்தில் புதிதாக Shed அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,50,000/–க்கும், மேற்படி தொகையினை இந்நகராட்சி பொது நிதியின்கீழ் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1856/2014)

**தீர்மானம் எண்.956 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 26**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான தளவாட பொருட்கள் வாங்க உத்தேச செலவுத் தொகை ரூ.2,00,000/– க்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.927 நாள் 23.06.2014–ல் அனுமதி வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 24.07.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணு. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி குறித்த விபரம் | | |
|---|---|---|---|---|
| வ.எண். | பொருட்களின் விபரம் | அளவு | ஜெயபாபா டிரேடர்ஸ் | சண்முகா கெமிக்கல்ஸ் |
| 1 | பிளீச்சிங் பவுடர் | கிலோ 1–க்கு | ரூ. 29/– | ரூ. 31/– |
| 2 | கறுப்பு பினாயில் | லிட்டர் 1–க்கு | ரூ. 55/– | ரூ. 58/– |
| 3 | நீர்த்த சுண்ணாம்பு துாள் | கிலோ 1–க்கு | ரூ. 8/– | ரூ. 9/– |
| 4 | மண்வெட்டி பெரியது | 1–க்கு | ரூ. 625/– | ரூ. 650/– |
| 5 | மண்வெட்டி சிறியது | 1–க்கு | ரூ. 275/– | ரூ. 280/– |
| 6 | பிக்காசி | 1–க்கு | ரூ. 790/– | ரூ. 820/– |
| 7 | வெட்டுக் கத்தி | 1–க்கு | ரூ. 295/– | ரூ. 310/– |
| 8 | குப்பை அள்ளும் தகடு | 1–க்கு | ரூ. 135/– | ரூ. 150/– |
| 9 | பெரிய மாறு | 1–க்கு | ரூ. 455/– | ரூ. 475/– |
| 10 | கைமாறு | 1–க்கு | ரூ. 27/– | ரூ. 30/– |
| 11 | பிளாஸ்டிக் கூடை சுண்ணாம்பு அடிப்பது (நைலான்) | 1–க்கு | ரூ. 580/– | ரூ. 610/– |

பெறப்பட்ட ஒப்பந்தப்புளிகளில் ஜெயபாபா டிரேடர்ஸ், தாழக்குடி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவானது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஜெயபாபா டிரேடர்ஸ், தாழக்குடி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.எச்1/1388/2009)

**தீர்மானம் எண்.957 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. குறைந்த ஒப்பந்தபுள்ளியை மன்றம் அங்கீகரிக்கிறது.**

**பொருள் எண். 27**

இந்நகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் வாங்க ரூ.98,000/–க்கு நகர்மன்ற தீர்மானம் எண். 646 நாள் 31.07.2013–ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன்பேரில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 2 நிறுவனத்தார் முன்வைப்புத் தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி அளிக்காததால் மீண்டும் 24.07.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி குறித்த விபரம் | | |
|---|---|---|---|---|
| வ.எண். | பொருட்களின் விபரம் | அளவு | Allanne safty & Fire Engineers | Jeya Paba Traders |
| 1 | கையுறை | 1–க்கு | ரூ. 200/– | ரூ. 170– |
| 2 | காலுறை | Set 1–க்கு | ரூ. 720/– | ரூ. 690/– |
| 3 | பாதுகாப்பு தொப்பி | 1–க்கு | ரூ. 250/– | ரூ. 240/– |
| 4 | ரெயின்கோட்டு | 1–க்கு | ரூ. 890/– | ரூ. 820/– |
| 5 | ரெயின்கோட் தொப்பியுடன் | 1–க்கு | ரூ. 820/– | ரூ. 790/– |
| 6 | மிளிரும் நூக்கெட் | 1–க்கு | ரூ. 480/– | ரூ. 430/– |
| 7 | முகவுறை | 1–க்கு | ரூ. 197/– | ரூ. 180/– |

பெறப்பட்ட ஒப்பந்தப்புளிகளில் ஜெயபாபா டிரேடர்ஸ், தாழக்குடி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவானது.
**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஜெயபாபா டிரேடர்ஸ், தாழக்குடி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.எச்1/1388/2009)

**தீர்மானம் எண்.958 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீா்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2014 ஜுலை திங்கள் 30–ம் நாள் (30.07.2014) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு–1–ல், கதவு எண்.15–6 கட்டிடத்தின் பின்புறம் அமைந்துள்ள வடிகால் ஓடையில் உடைவு ஏற்பட்டு மேற்படி கட்டிடத்தின் பவுண்டேசனுக்குள் கழிவுநீர் செல்வதால் சுவரில் நீர் கசிவு ஏற்பட்டுள்ளது. மேற்படி கட்டிடமானது வடிகால் ஓடையை விட தாழ்வாக உள்ளதால் இந்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி வடிகால் ஓடையினை உயர்த்தி அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.1,50,000/–க்கும், மேற்படி தொகையினை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1842/2014)

**தீர்மானம் எண்.959 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சி கணனி பிரிவில் பொருத்தப்பட்டுள்ள 5 KVA UPS மின்தடை ஏற்பட்டவுடன் Back up இல்லாமல் OFF ஆகிவிடுவதால், மேற்படி UPS –க்கான வருடாந்திர பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வரும் Novateur Electrical நிறுவனத்தின் மூலம் சோதித்து பார்க்கப்பட்டதில், மூன்று பேட்டரிகள் பழுதடைந்துள்ளதால், அனைத்து பாட்டரிகளையும் மாற்றி விட்டு நீடித்த உழைப்பிற்கு Tubler battery நிறுவவும், மேலும் பாட்டரி மற்றும் UPS –ஐ Server அறைக்குள் வைப்பது பாதுகாப்பற்றது என்பதால் காற்றோட்டமான இடத்தில் வைக்கவும் தெரிவிக்கப்பட்டது. எனவே இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியினை அருகில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மீட்டர் பெட்டி அறையில் UPS மற்றும் பேட்டரிகளை வைப்பதற்கு ஏதுவாக கணனி அறையிலிருந்து கேபிள் அமைப்பதற்கும், புதிதாக 14 எண்ணங்கள் Tubler Battery –கள் வாங்குவதற்கும் ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2,30,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ2/3562/2007)

**தீர்மானம் எண்.960 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சியில் 2014–15–ம் ஆண்டு தெருவிளக்கு வருடாந்திர பராமரிப்பு பணிகளுக்கு தேவையான மின் உதிரி பாகங்கள் வாங்குவதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.7,00,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.908 நாள் 23.06.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 23.07.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/S.JES எலக்ட்ரிக்கல்ஸ்,<br>திரித்துவபுரம். | மதிப்பீட்டு விகிதம் |
| 2. | M/S.J. எலக்ட்ரிக்கல்ஸ்,<br>மீனாட்சிபுரம், நாகர்கோவில். | மதிப்பீட்டைவிட 6.47% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.JES எலக்ட்ரிக்கல்ஸ், திரித்துவபுரம் நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1167/2014)

**தீர்மானம் எண்.961 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையம் அருகில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் அம்மா உணவக கட்டிடம் கட்டும் பணியினை திட்ட நிதியை எதிர்நோக்கி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.926 நாள் 23.06.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 03.07.2014 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.செல்லநாடார்<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 4.82% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 4.82% அதிகமாக அளிக்கப்பட்டதால், விலை விகிதத்தை குறைத்து இசைவு (Negotiation) கடிதம் வழங்க

மேற்படி ஒப்பந்தத்தாரருக்கு தெரிவிக்கப்பட்டது. ஆனால் கட்டுமான பொருட்களின் விலை மற்றும் பணியாளர்கள் ஊதியம் ஆகியவை வெளிச்சந்தையில் அதிகமாக உள்ளதால் விலை விகிதத்தை குறைக்க இயலாது என தெரிவிக்கப்பட்டதாலும், மேற்படி பணிக்கு வேறு எவராலும் ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்படாததாலும், பணியின் அஅசர அவசியத்தை கருத்தில் கொண்டு இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மேற்படி பணிக்கு திரு.சி.செல்ல நாடார், ஒப்பந்தத்தாரர் அளித்த மதிப்பீட்டை விட 4.82% அதிகமான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.இ1/1202/2014)

**தீர்மானம் எண்.962 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. மதிப்பீட்டைவிட கூடுதல் விலைவிகிதத்தில் அளிக்கப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளியை ஏற்றிட ஏகமனதாக மன்றம் முடிவு செய்து தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையம் அருகில் காலியாக உள்ள இடத்தில் ரூ.3,50,000/– மதிப்பீட்டில் ரேசன் கடை கட்டுவதற்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.900 நாள் 30.05.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 03.07.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.செல்லநாடார் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 4.78% அதிகம். |
| 2. | திரு.C.தேவராஜ் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 13.51% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும், மதிப்பீட்டைவிட கூடுதல் விலை விகிதத்தில் அளிக்கப்பட்டதால், விலை விகிதத்தினை குறைத்து இசைவு கடிதம் வழங்க கேட்டு சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், கட்டுமான பொருட்களின் விலை மற்றும் பணியாளர் ஊதியம் ஆகியவை வெளிச்சந்தையில் அதிகமாக உள்ளதால், விலை விகிதத்தினை குறைக்க இயலாது என தெரிவிக்கப்பட்டது. எனவே பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ1/1201/2014)

**தீர்மானம் எண்.963 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

குளச்சல் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கும், துப்புரவு பணிகளை மேற்கொள்வதற்கும் 27 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்தம் மூலம் பெறுவதற்கு, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வழியாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தற்போது புதிய உரக்கிடங்கு பணிகள் நிறைவுற்று உள்ளதாலும், மேற்கொண்டு இந்திரா காலனி குப்பை கிடங்கில் கொட்டுவதற்கு இடவசதி இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாலும், உப்பளம் உரக்கிடங்கிற்கு 20 பணியாளர்களை தற்காலிகமாக 89 நாட்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி பட்டியலின்படி பணிக்கு அமர்த்திட ஆகும் உத்தேச செலவு மதிப்பு ரூ.3,30,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : பணியின் அவசிய அவசரம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.எச்1/1905/2014)

**தீர்மானம் எண்.964 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1–ல் கீழ்காணும் பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு பொருத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1 கள்ளியடைப்பு பகுதியில் க.எண்.1–219/1 வீட்டின் முன்பக்கம் அமைந்துள்ள மின்கம்பத்தில் தெருவிளக்கு பொருத்துதல்.
2 க.எண்.1–214/2 வீட்டின் முன்பக்கம் அமைந்துள்ள மின்கம்பத்தில் தெருவிளக்கு பொருத்துதல்.
3 பவுண்டரி ரோடு க.எண்.1–218/2 வீட்டின் முன்பக்கம் அமைந்துள்ள மின்கம்பத்தில் தெருவிளக்கு பொருத்துதல்.
4 வடக்கு கள்ளியடைப்பு பவுண்டரி ரோடு பகுதியில் நேசமணி என்பவரின் கடையின் முன்பக்கம் அமைந்துள்ள மின்கம்பத்தில் தெருவிளக்கு பொருத்துதல்.
5 கதவு எண்.1–32/1 வீட்டின் முன்பக்கம் அமைந்துள்ள மின்கம்பத்தில் தெருவிளக்கு பொருத்துதல்.
6 கால்நடை மருத்துவமனை முன்புறம் க.எண்.1–67/1 –ன் அருகில் அமைந்துள்ள மின்கம்பத்தில் தெருவிளக்கு பொருத்துதல்.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1566/2014)

**தீர்மானம் எண்.965 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சிக்குட்பட்ட 3–வது வார்டு சன்னதி தெரு அம்மன்கோயில் மேற்கு பக்கமாக செல்லும் வடிகால் ஓடையின் பக்க சுவர் உடைந்து வடிகால் ஓடைக்குள் விழுந்துள்ளதால், கழிவுநீர் வெளியே செல்ல முடியாமல் சுகாதார சீர்கேடு ஏற்படும் வகையில் உள்ளது. மேலும் மேலத்தெரு சங்கம் அருகில் வடிகால் ஓடையின் தரை மற்றும் பக்க சுவர் உடைந்துள்ளதால் கழிவுநீர் வெளியே செல்ல முடியாமல் தேங்கி உள்ளது. எனவே பொது சுகாதார நலன் கருதி மேற்படி இரண்டு பகுதிகளிலும் வடிகால் ஓடைகளை சரி செய்து மேல் மூடி அமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2,20,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1498/2014)

**தீர்மானம் எண்.966 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு மீன்விற்பனைக் கூடம் அருகில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த மீன் விற்பனைக் கூடத்துடன் கூடுதலாக மீன் விற்பனைக் கூடம் அமைக்கப்பட்டது. மேற்படி மீன் விற்பனைக் கூடத்திற்குள் மீன் வண்டிகளை ஏற்றும் வகையில் பாதை (Ramp) அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.1,75,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1565/2014)

**தீர்மானம் எண்.967 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் அமைந்திருக்கும் 52 நிரந்தர மற்றும் தற்காலிக கடைகள் மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளது. எனவே மேற்படி 52 கடைகளையும் இடித்து அகற்றி விட்டு புதிதாக நவீன வணிக வளாகம் அமைப்பதற்காக மதிப்பீட்டுத் தொகை ரூ.1,20,00,000/—க்கும், மேற்படி பணியினை திட்ட நிதியை எதிர்நோக்கி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1902/2014)

**தீர்மானம் எண்.968 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சிக்குட்பட்ட காந்தி சந்திப்பு முதல் துறைமுகத்தெரு மீன்விற்பனைக் கூடம் வரை செல்லும் சாலையானது நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பின் கீழ் உள்ளது. மேற்படி சாலை மிகவும் மோசமாக பழுதடைந்து குண்டும் குழியுமாக காணப்படுவதால், போக்குவரத்திற்கும் பொதுமக்கள் நடந்து செல்வதற்கும் மிகுந்த இடையூறு ஏற்பட்டுள்ளது. எனவே காந்தி சந்திப்பு முதல் துறைமுகத்தெரு மின் விற்பனைக் கூடம் வரையிலான சாலையை நகராட்சி மூலம் பராமரிப்பு மேற்கொள்வதற்கு ஏதுவாக நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1901/2014)

**தீர்மானம் எண்.969 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சிக்குட்பட்ட காந்தி சந்திப்பு பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாக கடை மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளதால், மேற்படி வணிக வளாகத்தை இடித்து மாற்றி விட்டு புதிதாக வணிவ வளாக கடை கட்டுவதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.4,50,000/—க்கும், மேற்படி பணியினை திட்ட நிதியை எதிர்நோக்கி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1903/2014)

**தீர்மானம் எண்.970 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணாசிலையிலிருந்து பள்ளி ரோட்டிற்கு செல்லும் சாலையில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாக கட்டிடம் மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளதாலும், மேற்கூரையில் நீர் கசிவு காணப்படுவதால் மின்கசிவு ஏற்பட்டு ஆபத்தை விளைவிக்கும் வகையில் உள்ளதாலும், மேற்படி கட்டிடத்தை இடித்து அகற்றிவிட்டு புதிதாக வணிக வளாகம் அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.10,00,000/—க்கும், மேற்படி பணியினை திட்ட நிதியை எதிர்நோக்கி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1904/2014)

**தீர்மானம் எண்.971 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

இந்நகராட்சி குடிநீரேற்றும் நிலையங்களுக்கு ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் 2012 திட்டத்தின்கீழ் 200 KVA, 50 KVA, 30 KVA மற்றும் 62.50 KVA ஜெனரேட்டர்களும் வாங்கப்பட்டுள்ளது. மேற்படி 4 ஜெனரேட்டர்கள் மூலம் மின்வெட்டு நேரங்களில் குடிநீரேற்றும் நிலையங்களில் தண்ணீர் ஏற்றப்பட்டு வருகிறது. மேற்படி ஜெனரேட்டர்கள் வாங்கப்பட்டு ஒரு வருடம் முடிவடைந்து விட்டதால், இனிவரும் காலங்களில் ஜெனரேட்டர்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்வதற்கு 2014–15–ம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1905/2014)

**தீர்மானம் எண்.972 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி